**வத்தேகம நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வத்தேகம நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வத்தேகம நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீர்மானியொன்றின் கொள்வனவு விலை ரூபா 3,850 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அலகொன்றின் விலை ரூபா 4,260 என உள்ளடக்கப் பட்டிருந்தமையால் 59 நீர்மானிகளுக்குரிய இருப்பு ரூபா 24,190 மற்றும் 05 நீர் உபகரணங்கள் அலகுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 197,178 ஆல் கூடுதலாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 நிதிக்கூற்றுக்களின் மூலம் சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 12,448,846 கூட்டு மொத்தமாக 04 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 6,414,152 ஆன 08 பொறுப்பு விடயங்கள் தொடர்பாக அட்டவணைகள் பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றைத் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை | 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் சமர்ப்பிக்கும் போது அனைத்து பட்டோலைகளையும் சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | கணக்காய்விற்கு தேவையான அனைத்து சான்றுகளும் வழங்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,146,981 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,055,072 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 9,458,138 ஆன நிலுவை மீதியில் ரூபா 5,639,587 தொகையும் ஆண்டின் பட்டடியலிடல் ரூபா 18,851,056 இல் ரூபா 6,160,428 தொகையும் ஆண்டில் அறவிடப்படாது இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 11,800,015 ஆக இருந்தது. | 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து ஒலிபெருக்கிகள் மூலம் அவ்வப்போது பொது மக்களுக்க அறிவுறுத்தப்பட்டும் நடமாடும் சேவைகளை நடாத்தியும் நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,398,957 ஆன நீர் கட்டண நிலுவை காணப்பட்டதுடன் அதில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 779,207 ஆக இருந்தது. | 2022.07.04 ஆம் திகதி முதல் நிலுவை கட்டணங்கள் உள்ள நீர் வழங்கலை துண்டிப்பதன் மூலம் அறவிடுவதற்கு நடை முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப் பட்டிருந்தது. | நிலுவை நீர் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி ஆவணங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரையிலும் வீதவரி அறவிடப்பட்டு வந்தது. | 2022.04.27 ஆம் திகதி மாகாண மதிப்பீட்டாளரிடம் இருந்து புதிய வீதவரி மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக காலப்பகுதியினை அறிவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. | வீதவரி மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்குரிய 8 1/2 ஏக்கர் அளவிலான காணி ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 10 வீடுகளில் இருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 348,503 ஆன வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வாடகை 2019 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த துடன் அவ்வாடகை 2020.01.01 ஆம் திகதி முதல் செயற்படுத்துவதற்காக கௌரவ பொதுச் சபையில் அங்கீகாரத்திற்காக வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அறவிடப்பட வேண்டிய வாடகை அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 2,428,633 செலவிடப்பட்டு திருத்தியமைப்பட்ட நகர சபையின் பழைய நூலகக் கட்டிடம் 2020 ஜுலை 15 ஆம் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டு இருந்த போதும் எந்தவொரு பயன்பாட்டிற்கும் ஈடுபடுத்தாமல் மூடப்பட்டிருந்தது. | தற்போது நூலக சேவைகள் சபை மூலம் தேவையான உபகரணங்களைக் கொள்வளவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் அப்பொருட்கள் கிடைத்தவுடன் இந்த சிறுவர் நூலகத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | திருத்தியமைக்கப்பட்ட பழைய நூலகத்தை பொதுமக்களுக்கு சேவை வழங்குவதற்காக ஈடுபடுத்த வேண்டும். |
| (ஆ) | தொழிற்பயிற்சி நிலையமொன்றாக நடாத்திச் சென்ற பழைய சபை இருந்த கட்டிடம் 2017 திசெம்பர் 28 ஆம் திகதியளவில் மீண்டும் நகர சபைக்கு கையளிக்கப் பட்டிருந்த போதும் 2022 மே 19 கணக்காய்வுத் திகதி வரை அக்கட்டிடம் பயனுள்ள செயற்பாடொன்றிற்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021.04.29 கௌரவ பொதுச்சபையால் 06 மாதங்களுக்கு 06 மாதம் பிரதேச மட்டத்தில் கேள்வி கோருவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட போதும் கட்டிடததிற்கு பல முறை கேள்வி கோரப்பட்ட போதும் எந்தவொரு கேள்விதாரர்களும் முன்வரவில்லை. | பழைய சபைக் கட்டிடத்தைச் செயற்திறனாகப் பயன்படுத்த வேண்டும். |